


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், மீனவர்களுக்கு ஆபத்துக்கால எச்சரிக்கை கருவியினை மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (15.09.2016) வழங்கினார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 636/2016 நாள்: 15.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், மீனவர்களுக்கு ஆபத்துக்கால எச்சரிக்கை கருவியினை இன்று (15.09.2016) வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், மீனவர்களுக்கு ஆபத்துக்கால எச்சரிக்கை கருவியினை மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (15.09.2016) வழங்கி, தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கு முதல் கட்டமாக 150 ஆபத்துக்கால எச்சரிக்கை கருவிகள் வழங்கப்படவுள்ளது. அதன் அடையாளமாக, இன்று 10 மீனவர்களுக்கு இந்த கருவிகள் வழங்கப்பட்டது. இதில் மத்திய அரசு பங்கு 75 சதவீதமும், தமிழக அரசின் பங்கு 15 சதவீதமும் என மொத்தம் 90 சதவீத மானியத்தில் இந்த கருவிகள் வழங்கப்படுகிறது. ஒரு கருவியின் விலை ரூ.15,240/- ஆகும். இதில் மீனவர்களின் பங்கு 10 சதவீதம் (ரூ.1,524/-) மட்டும்தான். ஆபத்துக்கால எச்சரிக்கை கருவியில் நான்கு பட்டன்கள் இருக்கும். விசைப்படகில் தீ விபத்து ஏற்பட்டாலோ, மீனவர்களுக்கு மருத்துவ உதவி தேவைப்பட்டாலோ, விசைப்படகில் கசிவு ஏற்பட்டு மூழ்கும் நிலை ஏற்பட்டாலோ, விசைப்படகு பழுதாகி நின்றாலோ அதற்குரிய பட்டனை அழுத்தம் செய்யும்போது, கடலோர காவல்படையின் ஒருங்கிணைப்பு மீட்பு மையம் (சென்னை, கொச்சி) ஆகிய பகுதிகளில் உள்ள கடலோர காவல்படையினருக்கு தகவல் சென்றடையும். இதன் மூலம் மீனவர்கள் எந்த நோக்கத்திற்காக பட்டனை அழுத்துகிறார்களோ, அவ்வுதவிக்காக அனைத்து வசதிகளுடன் கூடிய கடலோர காவல்படை ரோந்து படகு உடனடியாக அப்பகுதிக்கு சென்று, படகில் உள்ள மீனவர்களுக்கு உதவி செய்து, மீட்க முடியும்.

எனவே மீனவர்கள் ஆபத்துக்கால எச்சரிக்கை கருவி பெற்றதுடன், உடனடியாக அதனை கடலோர காவல்படையினரிடம் பதிவு செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன், இந்திய கடலோர காவல்படை (தூத்துக்குடி) பிரதான் அதிகாரி திரு. ரன்பீர் சன்த், மீன்துறை துணை இயக்குநர் (பொ) திரு. சி. ரூபர்ட் ஜோதி, மீன்துறை உதவி இயக்குநர் திரு. ஜெ. நாபிராஜ், மீன்துறை ஆய்வாளர் (குளச்சல்) திரு. மி.விர்ஜில் கிராஸ், சிறப்பு உதவி ஆய்வாளர் (கடலோர காவல் குழுமம், குளச்சல்) திரு. எம்.மணிகண்டன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.